குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.95/2019

அ.சா.9

2024–ம் ஆண்டு டிசம்பர் 11–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 09–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுகவனம் | ஜாதி | |
| தந்தை பெயர் | மாரிமுத்து | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.10 மணி,

Accused A1. Kaliyamoorthy, A2.Ramasamy present. Advocate Mr. A.Nagenthiran present for A1. Advocate Mr.P.Kangaraj present for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் பாகல்பட்டியில் குடியிருந்து கொண்டு மாவட்ட வழங்கல் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 30.09.2018 ம் தேதி நான் பாப்பம்பாடி கிராம நிர்வாக அலுவலராக பணியில இருந்த போது மாலை 05.00 மணியளவில் தாரமங்கலம் காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து குற்ற் வழக்கு சம்பந்தமாக ஒரு நபரை கைது செய்து இருப்பதாகவும், அவரது விசாரிக்கும் போது சாட்சியாக இருக்க வருமாறு அழைத்ததின் பேரில் நானும் கிராம உதவியாளர் ரமேஷ் என்பவரும் காவல் நிலையம் சென்றோம்.

2. காவல் ஆய்வாளர் எதிரி களியமூர்த்தி என்பவரை விசாரணை செய்தார். அவர் சின்னப்பம்பட்டியில் அன்றைய தினம் மதியம் 01.00 மணியளவில் ஒரு நபரிடம் கத்தியை காட்டி ரூ.3500/– பணம் பறித்ததாகவும், அதற்கு முன்பு நகை பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் வாக்குமூலம் அளித்தார். பஞ்சுகாளிப்பட்டில் தனியாக இருந்த ஒரு நபரிடம் செயின் பறித்ததாகவும், தாரமங்கலம் ஜலகண்டாபுரம் சாலையில்

ஒரு பெண்ணிடம் செயின் பறித்ததாகவும் வாக்குமூலம் அளித்தார். பின்பு மேல்காமாண்டபப்பட்டியில் உள்ள எதிரி களியமூர்த்தியின் வீட்டில இருந்து சுமார் 5 பவுண் தங்க செயினை போலீசாரிடம் அவர் எடுத்து கொடுத்தார். போலீசார் அதை கைப்பற்றிய போது நான் சாட்சியாக உடனிருந்து சாட்சி கையெழுத்து போட்டேன்.

3. என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி களியமூர்த்தி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உளள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(1ம் எதிரி களியமூர்த்தியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா–ஆ. 6 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ–7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**. என்னுடன் எனது கிராம உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. எதிரியை கைது செய்த போது போலீசார் எனக்கு அழைப்பாணை கொடுத்து அழைக்கவில்லை என்றால் சரி. போன் மூலம் அழைத்தார். நான் காவல் நிலையம் செல்வதற்கு முன்பு எனது உயர் அதிகாரியிடம் அனுமதி பெறவில்லை என்றால் சரி. நான் இவ்வழக்கு தொடர்பாக காவல் நிலையம் செல்வதற்கு முன்பு எங்கள் அலுவலகத்தில் உள்ள பணி நகர்வு பதிவேடு (Movement Register) ல் பதிவு செய்யவில்லை. பொதுவாக அலுவலகத்தில் இருந்து வெளியே செல்லும் போது மேற்படி பதிவேட்டில் எழுதிவிட்டு செல்வது வழக்கம் என்றால் சரி.

5. இவ்வழக்கு சம்பவம் எப்போது நடந்தது என்றும் வழக்கு புகார்தாரர் யார் என்றும் எனக்கு தெரியாது என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவம் 1 மணிக்கு நடந்ததாக கூறியதன் பேரில் எனக்கு தெரியும். மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது. எனது முன்னிலையில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரி. எதிரியை பொதுமக்கள் பிடித்து காவல் நிலையம் கொண்டுவந்து ஒப்படைத்து, போலீசார் எதிரியை அடித்து சித்திரவதை செய்து வைத்திருந்தார் என்றாலும் மேற்படி விபரம் எனக்கு தெரியுமா என்றாலும் தெரியாது.

6. சின்னப்பம்பட்டி கிராமத்திற்கு தனியாக கிராம நிர்வாக அலுவலர் இல்லை. மேற்படி சின்னப்பம்பட்டி பாப்பம்பாடி கிராம வட்டாரத்திற்குட்பட்டது. மேற்படி பாப்பம்மபாடி கிராமத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் உள்ளார். எதிரி கைது செய்யப்பட்ட தாரமங்கலத்திற்கு தனியாக கிராம நிர்வாக அலுவலர் உள்ளார் என்றால் சரி. நான் பணிபுரிந்த பாப்பம்மபாடி கிராம நிர்வாக அலுவலரின் எல்லைக்குள் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும் தாரமங்கலத்தில் தான் கைதுசெய்யப்பட்டார் என்றாலும் பாப்பம்பாடி கிராமத்தில் நடந்த சம்பவத்திற்காக எதிரி கைது செய்யப்பட்டதால் என்னை சாட்சியாக இருக்க அழைத்தார்கள்.

9. எதிரி களியமூர்த்தியின் மேல்காமாண்டபப்பட்டியில் உள்ள வீட்டிற்கு நான் சென்றதாக கூறியுள்ள நிலையில் மேற்படி வீடு காரை வீடா, ஓட்டு வீடா அல்லது கூரை வீடா என்று சொல்லவில்லை என்றால் சரி. நான் கிராம நிர்வாக அலுவலர் என்பதால் எனக்கு இருப்பிடச்சான்று வழங்குவதற்கு எனக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. வட்டாட்சியர் தான் வழங்குவார். நான் இருப்பிடம் குறித்து பரிந்துரை செய்ய அதிகாரம் உள்ளது. மேல்காமாண்டபப்பட்டியில் உள்ள எதிரி களியமூர்த்தியின் வீடு உள்ள வீதியின் பெயர் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் மேற்படி விபரம் எனக்கு தெரியவில்லை.

10. நாங்கள் எதிரி களியமூர்த்தியின் வீட்டிற்கு சென்ற போது தங்க நகை மதிப்பீட்டாளர் யாரையும் உடன் அழைத்து செல்லவில்லை என்றால் சரி. எதிரி களியமூர்த்தி தனது வீட்டில் இருந்து நகையை எடுத்து ஆஜர் செய்ததாக நான் கூறியுள்ள நிலையில் அவரது வீட்டில் இருந்து எந்த அரையில் இருந்து, எந்த பீரோவில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. எனது பணி நிமித்தம் காரணமாக எனக்கு கிராம நிர்வாக அலுவலரின் முத்திரை உள்ளது என்றால் சரி. பொதுவாக எனது அலுவல் நிமித்தமாக செய்யும் கையெழுத்துகளின் கீழ் எனது முத்திரையை பதிப்பேன் என்றால் சரி.

11. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் எனது கையெழுத்துக்கு கீழ் கிராம நிர்வாக முத்திரையை பதிக்கவில்லை என்றால் சரி. நான் சொல்வது போல் போலீசார் எனக்கு தகவல் ஏதும்

கொடுக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயாரித்த ஆவணங்களில் முன்தேதியிட்டு கையெழுத்து செய்துவிட்டு, காவல் துறைக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியின் வீட்டிற்கு நான் செல்லவில்லை என்றாலும் எனது முன்னிலையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 12.40 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.